270

யாசாகிர்.

ஆத்துமஞான பஞ்சரத்தின சிந்து

நாகூர் ஷாகுல்ஹமீது பாத்துஷா ஆண்டவரவர்கள்
பேராகிய தவசிரேஷ்ட சற்குருநாதா ஹலரத்
மௌலானா மௌலவி,
செய்யிது சுல்த்தான் கலீபா சாஹிபு
ஆலீம் ஆரிபுபில்லா ஹில் காதிரி ஒலியுல்லா அவர்களின்
கலீபாக்களிலொருவராகிய மேலப்பாளையம்,
மெஞ்ஞான அருள்வாக்கிய புலவர்,
செய்குமீரான் லெப்பை கலீபா சாஹிபுல் காதிரி
யவர்களாலியற்றியது.

பேட்டை,
சே. ப. முகம்மது செய்கு இபுராஹீம் ராவுத்தர[illegible]ர்கள்
செய்த மனோதயாள தனோபகார நிதியால்.

திருநெல்வேலி, ஹிலால் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.
1934.

ஹிஜரி 1352 துல்கஅதா.

இதன் விலை அணா 4.

Q7:417
N34
172314

யாகாதிர்

ஆத்துமஞான பஞ்சரத்தின சிந்து.

திருநெல்வேலியைச் சார்ந்த மேலப்பாளையம்
சங்கீத மகா வித்வான்
ஷாகுல் ஹமீதுப் புலவரவர்கள் குமாரர்
மெஞ்ஞான அருள்வாக்கிய
புலவர்
செய்குமீருன் லெப்பை கலீபா சாஹிபுல் காதிரியவர்களா
லியற்றியது.

கடவுள் வாழ்த்து.

வெண்பா

முக்கோண வீதி முளைத்திலகு தீபம்போல்
ஹக்காக நின்றிலங்கும் ஆண்டவனே—முக்கியமாய்
போற்றுமெய் ரூபத்தின் பூரணத்தின் றாஹிதனை
சாற்றுதற்கு நல்லருளைத் தா. 1

விருத்தம்

திருமணி மஹ்லுதாத்தின் றிகளொளி தோற்றமெல்லாம்
கருமணி வடிவைப்போலே ஹாவிராய் தோன்றிநயனத்
திருமணி நேத்ரவட்டத் திலங்கிய ஆத்துமாவை
குருமணி யாகப்பாட குருபரன் காப்புநீயே. 2

வசனம்

தெளிவான தீனுல் இஸ்லாமென்னு மார்க்கத்தில் நடந்து வருகிறதாலி பானவனே திட்டமாக அறிந்துகொள். உன் உடலுக்குள் ஒடித்திரியும் றாஹு என்னும் ஆத்துமாவானது, ஆண்டவனுடைய ஒரு வொளிவாயிருக்கும். அதுதான் முக்பபதென்னம் உகப்பினுடைய ஸ்தலம். அதில் நான்குவித அம்ஸங்களுண்டும்.

1-வது, றாஹு நாமியா வளர்கின்ற ஆத்துமா.
2-வது, றாஹு முதஹர்ரிகா உசும்புகின்ற ஆத்துமா.
3-வது, றாஹு நாத்திகா பேசுகின்ற ஆத்துமா.
4-வது, றாஹுல் குதுசியா பரிசுத்த ஆத்துமா.

சிந்து

(இராகம்—திருவுற்றிலகு கங்கை என்ற மெட்டு)

திருவுற்றிலகுமந்தப் பொருள்றாஹின் ஞாத்துமாவை
சேர்ந்திடு மிவ்வுடலுக்குள் காட்டுவேன்—அதில்
சார்ந்திடும் நாலின்வகையை தீட்டுவேன்—முதல்
தீரநாமிய பாரமாமுத ஹர்ரிகாவெனு நாத்திகாவாம்
சிறக்கும் றூஹுல் குதுசியாமீது—ஞானம்
துறக்குமெய் ரூபவழியாமிது. 1

நாமியா வளர்க்கிறது சேமமா முதஹர்ரிகாவே
நனிவாய்ச் சடலமசைவு செய்ரது—றாகு
பனிநாத்திகாவும் பேசுகின்றது—வுடலில்
நாதனின் ஒளியோதிடு மெய்யாதியாம் றூஹுல்குதுசி
நலமாம் பரிசுத்த ஆவியானதே—யதின்
றலமா மெய்மூளை வழியாமிதே. 2

முந்தி யாத்துமா வதுதான் பிந்தியுட லெவ்விடத்தில்
முடுகிவியா பித்திருக்கிறது—அது
வுடல்முழுது நிரம்பிருக்கிறது—ரண்டா
மூர்க்கவாத்தும யோர்க்கமாயுதி ராக்கினிப் பார்வைப்பிரகாச
முன்னிலே கருவிகளை நடத்துரது—சுயந்
தன்னிலே ராஜாங்கமே செலுத்துரது. 3

மூன்றாவ தாத்துமாவே தோன்றிடும் நாபியில்நின்று
மூச்சினெ டெழும்பிடுஞ் சுவாசமே—வந்து
[illegible] டோடிடும் பிரகாசமே—சது
மோனஆத்தும வானதே பிரதான இருதயமீதினின்று
மூளையோடிருந் தரசுசெய்ரது—எந்த
வேளையுநிரா மயமாயுள்ளது. 4

யேத்தமாமிவ்வுடலுக்குள் ளாத்துமா மூன்றுமழிந்து
யெடுபட்டுபோகிடு மவ்வேளையில்—நயனத்
திடையிலு லாவிடு மந்நாளையில்—ஆதி
ஏகனுயகனுகவே நின்றாடிடும் றூஹுல்குத்துசி
இலங்கும் பிரகாசசோதி பார்க்குவீர்—ஞானம்
துலங்கு மெய்யுடலை யறிகுவீர். 5

சுாமிலான செய்கைதேடி சேமமா நாசூரில் சென்று
காதிரொலி ஆண்டகை இடத்தில்—நின்று
ஓதிடு மவ்வேளையிற் கனவிலே—காட்டும்
ஹாதியாஞ் ஜெகசோதியாந் தவநீதியாஞ் சுல்த்தான்கலீபா
கைபிடித்து காட்டிவைத்த தீர்ச்சையே—எந்தன்
மெய்யினின் மெய்யாக கண்ட காட்சியே. 6

திங்களையளைத்த நபிமங்களத்துடனலிக்கு
செய்திடு மெஞ்ஞானோபதேசமாம்—இது
தெய்வ அம்சம் பொருந்துப் பிரகாசமாம்—ஹக்கன்
தீனின் குலவழிஞானியாய் வருமோனஷாகுல் ஹமீதுப்புலவர்
செய்தவக் குமாரன் சொல்லுஞ் சிந்திது—இதை
மெய்யுடன் படிப்போர்க்கு மேலிது 7

வசனம்

ஞானமென்னும் ஹோதாவில் நடந்துவருகிற தாலிபான வனே 1-வது றூஹுன்னாமியாவாஜிபுல் உஜூதுநபுசு அம்மாரு உள்த்தல மண்ணீரல் அதர்க்கதிகாரர் ஜிபுரீல் வழிசரியத் தெடுத்து திக்றுஜல்லியால் இல்முல் எக்கினை கொண்டு மகாம் நாசூத்திற் சேர்ந்து கொள்வாயாக.

சிந்து

(இராகம்—தெள்ளூ தமிழுக் குதவு யென்ற மெட்டு)

ஆத்துமாறூஹுன்னாமியாவுடனே—நப்சு
அம்மாரா கொழுகி நிற்குந்திடனே—யதை
யடக்கும் வழிசரியத் தெடுத்து மெய்யுடற் றன்னை
யறிவா யதை தெரிவாய் 1

இச்சையை மிகுதியாக கொடுத்தே—கொண்
டிருக்குங் கெடுதிகுணம் விடுத்தே—உன்னில்
எத்தமான ஆத்துமாவின் சூஸ்த்திரப் பொருள் மந்திர
மெடுப்பாய் யதை தொடுப்பாய் 2

லாஇலாஹா இல்லல்லாவென் றோதே—நப்பி
நாசூத்திடது மார்பதின் மீது—பார்த்து
நாவினில் திக்கிர் ஜல்லியை யோய்வில்லாமல் செய்து வந்தால்
நலமே பதின் றலமே. 3

ஹய்வானிய்யத்தான ரூஹத் தோணும்—அங்கு
அண்ணல் மலக்கு ஜிபிரீலே காணும்—பாவா
ஆநநன்னபியுடனே துமபுபக்கரையும்
அறிவா யொன்னில் தெரிவாய். 4

வூஜிபுல் உஜூதான நபுசாம்—அதில்
வந்திடு மிஸ்த்தூலரூபம் புதுசாம்—தீனின்
வழியையடுந்து ஞானப் பொருளில் மனதையூட்டி
வாழ்வாய் எப்பும் ஆழ்வாய். 5

மண்ணும் பற்குத்தியா மிவ்வுடலில்—வழி
வாசலது நாக்கின் ஞெனியதுவில்—ஒரு
வல்லவன் தொழுகைதனை யுல்லாசத்துடனெடுத்து
வருவா யருள் பெருவாய். 6

நப்சு செய்தானியாவை யொடுக்கி—எந்த
நாளெல்லாம் வணக்க முளிப்பாக்கி—திக்கிர்
லாஇலாஹா இல்லல்லாவை ஆபுளுள்ளிணக்கங் கொண்டு
நாடே மனங் கூடே. 7

முஸ்லீமானவர் களின் வழியாம்—இதை
முடுகி நடப்பவர் கல்பொளிவாம்—அருள்
முத்திமெய் பக்குலுடன் புத்தி வணக்க மெடுத்து
முடிப்பா யரு ளெடுப்பா. 8

ஆலமா மிதாலிதை கொண்டு—புலன்
அடக்கி இல்முல் எக்கினை விண்டு—ஒரு
ஆதியி[illegible]நிறைந்த சோதிஇற சூல்சரணை
அடிப்பா வழி தொடுப்பாய். 9

வசனம்

திட்டமாக தெரிந்துக் கொள்தாவி பானவனே
2-வது றாஹூமுதஹர்ரிகாமும் கினுல் உஜூது
நபுசுலவாமா உள் தலம் கருசுரல்
அதர்க்கதிகாரர் மீய்க்காயில் வழிதரீகத்தெடுத்து திக்கிர்கல்பியால்
இல்முல் எக்கினைகொண்டு மகாமல கூத்திர்சேர்ந்து கொள்வாயாக

சிந்து

(இராகம்—ஆறுமுகவடி வேலவனே என்ற மெட்டு)

தோணும் றூஹு ஆத்துமா முதஹர்ரிகா
ஆதிமும் கினுல் உஜூது
தோன்று நபுசுலவ்வாமாவதோடு
துலங்குந் தரீகத்திது 1
மலகுத்திருநாசி கழிமுனை தன்னில்
மருவிகுருவை நாட்டி
மாருதியானங்கள் செய்து வந்தாலுடல்
வசமாகு மொன் றன்னில் 2
ஆலமலக் கூததில் வழியாக
அரூபியாய் நித்திரையில்
ஆடித்திரியு மயாத்தான ஆத்துமா
அதுவாகு மிவ்வழியில் 3
இல்லல்லா வென்னுந்திக்கிர் கல்பியாக
இசைவாக செய்யவேணும்
வெல்லு மலக்கு மீய்க்கா யிலுடனே
வெளியாகியே காணும் 4
வுடலிலதர்க்கு தலங்கரு ஈரலா
மோங்குமதின் வாசலாம்
ஒளியுற்ற கண்ணுமதை பார்த்து நபிதோழர்
உமரிப்னு கத்தாபாம் 5
உமரு கத்தாபோடுமூசா நன்னபியையும்
உருதியா யுடலுக்குள்ளே
தமருட னம் பியா அவுலியாக்களையுனி
ஜல்தியாய் கண்டுகொள்ளே 6
மூமீன்கள்செய்யு மனுஷ்டான வணக்கத்தில்
முறையாய் நடந்துகொண்டே
மூர்க்க நபுசு ஹைவானியை யொடுக்கி
முத்தி தலமுங்கண்டே 7
ஆலமஜ்சாமென்னு மெய்ரூப சூழ்சத்தில்
அருளான தாத்துக்குள்ளே
ஐனில் எக்கினின்ச் சுடரொளிவானதை
அகந்தன் னிற்கண்டுகொள்ளே 8

கண்காட்சியாகவே கண்டுதரிசித்து
கத்தனை எத்தினமும்
கல்புக்கண்ணால் பார்த்து நோட்டமிட்டிருந்திடும்
காசினி லனுதினமும் 9

வசனம்

ஞான மென்னும் அகமியப்பொருள் தெரியவந்ததாலிபான வனே திட்டமாக கண்டுகொள் 3-வது றாஹுனாத்திகாரமும்தனில் உஜுதுநபுசுமுல் ஹிமா. உள் தலம் நுரையீரல் அதர்க்கதி காரர் இஸ்ராபீல் வழி ஹகீகத்தெடுத்து திக்றுறாஹியால் ஹக் குல் எக்கினைகொண்டு மகாம்ஜபரூத்தில் சேர்ந்துகொள்வாயாக.

சிந்து

(இராகம் பூமி மேச்சிடும் என்ற மெட்டு)

நாத்திகா வெனுஞ் சூஸ்த்திர ஆத்தும
நாடுவாய் மனங்கூடுவாய் தவந்தேடுவாய்
நபுசுமுல் ஹிம்மா மும்தனில் உஜுதினில்
நல்குவாவ் எப்புஞ் செல்குவாய் 1
ஆதியால் மொழிவருகிர தாகவே
அறிகுவாய் யதை தெரிகுவாய் ஞானம் புரிகுவாய்
அல்லாவெனுந்திக்கிர் றாஹியை மூச்சினில்
அடைக்குவா யருள் தொடுக்குவா 2
ஜபரூத்தில் செய்குவெளியாகி வருவதை
சந்திப்பாய் மனம் புந்திப்பாய் ஞானம் சந்திப்பாய்
தாஹா முகம்மது நபியின் ஸிபத்தோடு
சாருவா யதில் சேருவா 3
நட்பா யுடலுக்குள் நுரையீரலதின் வாசல்
நாசியா மதுவாசியாஞ் சுயதேசியாம்
நடக்கு மிசுராபி லுதுமானையுங்கண்டு
நற்றிகொள் ஞானம் பெற்றுக்கொள் 4
நபுசு னூஹானி யுடனுறவாடி
நடக்குவாய் கல்பை பார்க்குவாய் அருள்சேர்க்குவாய்
நலமேவு மெய்ஞ்ஞான தௌஹீதினிற்கூடி
நாட்டுவா யருள் கூட்டுவா 5

உதிப்பென்னு மெல்ஹாம கேத்துடலுக்குள்
ஓடுமே யருள்கூடுமே ஜெய நாடுமே
ஓங்கார கம்பத்தில் நீங்காத ஐன்சுடர்
ஒளிருமே எங்குந் தளிறுமே 6
முகக்கண்ணை மூடி யகக்கண்ணினால் பார்த்து
மூட்டிக்கோ கல்பை தீட்டிக்கோ துறந்தோட்டிக்கோ
முன்விழி மத்தியில் நம்மையைத் தீபத்தை
முன்னிலே கண்டொந் தன்னிலே 7
பார்க்கப் பார்க்க பரமானந்த சோதி
பந்தாடுமே கல்புநாடுமே யதிற்கூடுமே
பாரோவிமார்கள் நடக்கு வழி தன்னை
பார்த்துக்கொள் தவஞ் சேர்த்துக்கொள் 8
ஆலமருவா ஹினிற்சீலமுடன்றன்னை
அறிகுவாய் மனம்புரிகுவாய் தவம் பெருகுவாய்
ஹக்குல் எக்கீன்றனை முக்கியமாய் கண்டு
ஆசிப்பாய் ஞானம் பூசிப்பாய் 9

வசனம்

ஞான மென்னும் பிரகாசம் தெரியவந்த தாலிபானவனே திட்டமாக அறிந்துகொள். 4-வது றாஹூல் குத்தூசியா ஆரிபுல் உஜூது நபுசுமுத்ம இன்ன உள்த்தலம் பீத்தீரல் அதிக்கதிகாரர் இஸ்ராயில். வழிமஃரிபத் தெடுத்து திக்றுசிற்றியால் கமாலுல் எக்கினை கொண்டு மகாம் லாகூத்திற் சேர்ந்து கொள்வாயாக.

சிந்து

(இராகம்—சேந்திமா நகரந்தனில் மேவிய என்ற மெட்டு)

தோற்றமாமதி யாத்துமா றாஹூல்குத்
தூசு நபுசுமுத்ம இன்னவாம்—மதி
பேகமாரிபுல் உஜூதியாம்—திக்கிர்
தூங்கமா இருகண்கள் மூடி
யங்கத்துள் ளிற் றிங்கள் போலொளி
தோன்றுமாயிரத் தெட்டிதழின் சுடர்
துலங்குந் நயனத்திடையிலே—கண்டு
கலகத்தை நீக்கு மப்போதிலே— 1

மோகமாகிய லாகூத்து பதியினில்
முன்னோனைத் தவிர வேறில்லையே—அங்கு
மன்னனைப் பார்ப்பதுந் தொல்லையே—மன
முத்தியாய் குருபக்தியாய் தவ
சித்தியாய் பரிசுத்த ஆவி
மூச்சினோடிணங்கும் பொருளானதை
மூக்கு முனைபுருவ மத்தியே கண்டு
பார்க்குஞ் சுயரூப சித்தியே 2

ஆலமான இஸ்த்தூலவுடலுக்குள்
ஐனின் சுடரொளி வீசுமே—ஏகன்
மெய்ரூபம் நின்றெதிர் பேசுமே—ஒரு
ஆதியின் திருதூதராமகு
மூதரிறசூல் சோதி வடிவே
ஆத்துமா வென்னும் நேத்திர வட்டத்துள்
ஆடித்திரியுங் கண்பிள்ளையே—கண்டு
கூடித் தெரியுமாண் பிள்ளையே 3

சடலமானதில் கொடுமை நெருப்பதின்
தான முடலுக்குள் பித்ததாம்—அதில்
மோனமுறும் வழிகாததாம்—அங்கு
தலைமை கொண்டுல கெங்கும் பல்லுயிர்
தொலைக்கு மிகராயீலலியையும்
தம்பமாகவே அம்புவி மீதினிற்
றன்னுக்குள் தானுககாங்குவீர்—லோக
மென்னும் பேருடலையறிகுவீர் 4

சீலமேவிய ஆலமின் சானிலே
சேருங் கமாலுல் எக்கினிலே—நின்று
கூருஞ் ஜலாலின் ஜமாலிலே—யுற்று
சிந்தையைப் பார்த்தெந்த நேரமும்
பந்தம் போலொளி வந்திலங்கிடும்
சீனென்னுங் கண்ணாடியின் வட்டமே
தெளிவாய் குறக்குமப் போதிலே—ஹக்கன்
ஒளிவாக காணுந்தர் போதிலே 5

ஏகனையனென் றோங்கு மெய் மூளையோ
டிருதய தாமரைக்காயினின்—றுற்று
வருகு முதிப்பு நினைவினின்—நின்று
எங்குமே பிரசங்கமாகவே
அங்க மீதிற்றிங்கள் போலவே
எம்பிரானெனனுந் தம்பிரானின்னொளி
இலங்கிக் கொண்டுருப்பதை பார்க்குவீர்—ஹக்காய்
துலங்கு மெய்புடனுக்குள் நோக்குவீர். 6

சங்கையாந் திக்கிரிங்கிர்த ஜல்லியை
சாற்றிதியான முருவாக்கியே—கொண்டு
போற்றும் றாஹியை யுளந்தாக்கியே—வைத்து
தன்வடிவை முன்விழியினில்
நன்னயமாய் பார்த்தன்னேரந்
தன்னைதானே மறந்து தலைவனென்று
தானே தானனவன் றெண்ணுவீர்—ஹக்கன்
மோன மெய் சூழ்ச்சத்தில் நண்ணு வீர். 7

தோத்திரத்துடனாத்துமா வுடலுக்குள்
தோன்றுந் நாவின் பங்கை காட்டினேன்—னது
ஊன்றுந்தலங்களை தீட்டினேன்—மன
தொந்த மேவிய யந்தமாமதி
சிந்தை மீதினி லெந்த நேரமுந்
துதிக்குஞ் ஷாகுல் ஹமீதுப்புலவரின்
சொந்த குமாரனின் வாக்கிது—பிர
பந்த மெனும் ரத்ன சிந்திது. 8

ஆத்துமஞான பஞ்சரத்தின சிந்து முற்றிற்று.

ஆத்துமஞான கீர்த்தனை.

(பதம் இராகம். தசரத ராஜகுமாரா என்ற மெட்டு)

பல்லவி

கபிக்கடையாளம்—பதினேர்துண்டும்—அந்தை கண்டும்
ஈமான்கொண்டும்—உருதிவிண்டும்—

அனுபல்லவி

ஹபிபு முகம்மதர்க்கடியுந் தோயாது
அருளூற்ற மெய்நிழல்சாகை யிராது
அறுசினிற் சிரசும் பதம்தகுத் தாவில்
சுபமா யொன்னுடலுக்குள் தெரிவாய் அதையறிவாய்
மனப்பரிவாய் கண்டுகொள்வீர். (நபிக்)

1. முன்கண்ட தூரம் பின்னாலே காணும்
மூர்க்க மண்பூச்சிமள் மணர்ந்திடா தோணும்
நன்மேகங் குடைநிழல் வந்திடப்பூணும்
நலமாயொன் கல்புக்குள் காண்பாய்
அருளாண்பாய் தவப்பண்பாய் கண்டுகொள்வீர். (நபிக்)

2. பாத மிரண்டையுங் கண்டோ ரிங்கில்லே
பாங்கான மேனியை கண்டோ ரிங்கில்லே
போதமெய் சிரசை கண்டோ ரிங்கில்லே
பொற்ப்பாய் முஷாஹதா செய்தால்
மனக்கண்ணால் உந்தன் முன்னால் கண்டுகொள்வீர் (நபிக்)

3. மானிலத்தில் மலஜலங்களு மில்லே
மகிமை துயிலாடை களேந்ததுமில்லே
மோனமாய் நகரோமம் வளர்ந்ததுமில்லே
முன்விழிக்கிடைதனில் பார்த்தே மனஞ்சேர்த்தே
சம்சுதாத்தே கண்டுகொள்வீர். (நபிக்)

4. போத மொருநாளு மறந்ததுமில்லே
பொன்மேனி கஸ்தூரி கமழுமெவ்வெல்லே
வேதர் ஷாகுல் ஹமீது மைந்தனின்சொல்லே
விளப்மா யொன்னுக்குள் பார்ப்பாய் யருள் சேர்ப்பாய்
கலீ தீர்ப்பாய் கண்டுகொள்வீர் (நபிக்)

(பதம் ...ராகம். இந்துஸ்தான் மேரே மவுலாபிர என்ற மெட்டு)

பல்லவி

குன்ஹூ தாத்திலிலங்கிடுஞ் சோதியே
குதுபுல்லக்தாபு முஹியித்தி ணுண்டகையே

அனுபல்லவி

1. முன்னவன் னொளிவினுக்குள் முச்சுடரா யுற்றவா
மூன்றெழுத்த யுலகமெங்கு முப்பொருளாய் வந்தவா
நன்மா தவத்தொலி களணிமணியே—கவ்து
நாதர் முஹியித்தி னாண்டகையே (குன்ஹூ)

2. ஆதிஅறுவாஹினுக்குள் அரும்பொருளா யுற்றவா
மூலமாமின்சானில்வந்தே ஐனொளிவாய் நின்றவா
காதிருக இலங்கிடுங் கண்மணியே—ஜீவ
காருண்ய முஹியித்தி னாண்டகையே. (குன்ஹூ)

3. வாழுஞ் சுல்த்தானன்ன சீராவானதி நிற்கூடியே
வந்திடுஞ் சனோபரியின் வழிதுறந்து நாடியே
ஆளுமென் னுடலுக்குள் அரூபமாகியே—எனக்
கருளு முஹியித்தி னாண்டகையே. (குன்ஹூ)

4. ஏத்தமா மிவ்வுடலுக்குள்ளிலிலங்கிடும் றூஹானியே
எழுசிபத்தையொருசிபத்தா இணக்குஞ் சமதானியே.
காத்து ரட்சிக்குமகு பூபுசுபுஹானியே—அப்துல்
காதிர் முஹியித்தி னாண்டகையே. (குன்ஹூ)

5. காமமாம் கடல் கடந்து கத்தனிணைவாகிட
கல்பிணை துறந்துவைத்து கடலைப்போல் விரிவாகிட
சேமம் தந்தென்னை காக்குமகாமதியே—எங்கள்
செய்யிது முஹியித்தி னாண்டகையே (குன்ஹூ)

6. மூலமந்திரப் பொருளை மூட்டியகம்பார்த்திட
முசாஹதாவழி இருப்பில் முன்வழியில் தோன்றிட
சீலமாக வந்தருளும் தயாநிதியே—எங்கள்
செய்யிது முஹியித்தி னாண்டகையே (குன்ஹூ)

7. பாடும் ஷாகுல்ஹமீதுப்புலவர் மைந்தனை கண்பார்த்திடும்
பாரினி லெந்துயரை தீர்த்து பாக்கியந் தந்து காத்திடும்
நாடும் நாட்டத்திற் குதவிடும் பூபதியே—கவ்து
நாதர் முஹியித்தி னாண்டகையே (குன்ஹூ)

(பதம் இராகம். இந்துஸ்தான்)

பல்லவி

அஜ்மீர் சரீபிலிலங்கு மெஞ்ஞானி
ஆண்டகை காஜா முஹீனுதீனி.

அனுபல்லவி

நஜ்முத்தி னென்னும் பிராஞ்சமதானி
நாயகம் காஜா முஹீனுதீனி.

1. சர்குரு செய்யிது உதுமான் ஹாரூனி
சாஹிபின் றீட்சைபெறும் றகுமானி
தர்பரன் தாத்தான சம்சொளினி
சருதாரே காஜா முஹீனுதீனி (அஜ்மீர்)

2. தயார் வயற்றிலுரைந்திருந்தே
சங்கை தருங் கலிமா மொழிந்தே
நாயகமா யுலகில் பிறந்தே
நாதாந்த காஜா முஹீனுதீனி (அஜ்மீர்)

3. ஐனுல் எக்கீனை தெரிந்தரசாளும்
ஐனில்லா அரபியே எந்தநாளும்
மெய்ரூபங் கண்டு புகழ்ந்திரைஞ்சும்
வேதாந்த காஜா முஹீனுதீனி (அஜ்மீர்)

4. அவ்வலு தீனின் மஃரிபத்துல்லா
அவ்வழியுளத்தி லறிந்த ஒலியுல்லா
முவ்வுலகம் புகழுந் திக்ருல்லா
முருசிது காஜா முஹீனுதீனி (அஜ்மீர்)

5. மாமதினா ரவ்லாவினிற் சென்று
மகிமை முஷாஹா தாவினிற் நின்று
நாம முகம்மது தரிசனம் பெற்று
நர்தாந்த காஜா முஹீனுதீனி (அஜ்மீர்)

6. செய்யிது கியாதுத் தீனின்பாலர்
செல்வி மாஹே நூரின் குமாரர்
துய்ப்பொருள் ஹாகுல் ஹமீதருள் மைந்தன்
தோத்திரம் காஜா முஹீனுதீனி (அஜ்மீர்)

(பதம் இராகம் சோமசுந்திரமே என்ற மெட்டு.)

பல்லவி

க்ஷேமமந் தந்தருள்வீர்—நன்னுகைபீருன் சாகிபெரலியே

அநுபல்லவி

காமமாங் கடல் கடந்து
கத்தனின் சோதி தெரிந்து
லாமகானின் மீதிருந்து
நாதன் வேதம் போதம் வந்திட (சேமந்தந்)

1. மாய்கைபட்டணங் கடந்து
மாற்றமான தலமடிந்து
பாயும் பரியேறிகொண்டு
பாடி தேடி கூடி நின்றிட (சேமந்தந்)

2. அம்மா ராவைங்கடந்து
அனனிய்யத்தையுந் தவிர்ந்து
செம்மையாம் உஜூதை கண்டு
சேர்ந்து நேர்ந்து கூர்ந்துரைந்திட (சேமந்தந்)

3. படுகுளி கன்னசு கடந்து
பாளொசுவாசு மடிந்து
தொடுக்குஞான நிலையடைந்து
சோதி ஆதி நீதி வந்திட (சேமந்தந்)

4. தொண்ணூற்ருர் தத்துவங்கடந்து
துலங்கு ஞானவழி யுரைந்து
எண்ணு மெய்ரூபமே வந்து
யேற்றிபோற்றி சாற்றிநின்றிட (சேமந்தந்)

5. காபகவுசைனியிற் சென்று
கருத்தினுற் றுறந்து நின்று
தீபஞானச் சுடர்முன் வந்து
தீரநேரபாரமாகிட (சேமந்தந்)

6. சிபத்திருபதுந் தெரியவே
சிறந்தெழுதலங் காணவே
அபயமெய் உஜூதுவரவே
ஆச நேசபாசம் வந்திட (சேமந்தந்)

7. பாடுஞ் ஷாகுல்ஹமீது மைந்தன்
பகருஞான கவியின் வேந்தன்
கூடு மெய்யுடலறிந்து
கூரித் தேரி சீரிலடங்கிட (சேமந்தர்)

(பதம் இராகம். சுஜன்ஜீவனு என்ற மெட்டு)

பல்லவி

அருமை வேதாரம்—ஷாகுல்
ஹமீது நாதராம்—ஆதி

அநுபல்லவி

கருணையானோராம் கவலைதீர்க்கு பாதராம்
கங்கைசூழ் புவிஎங்குமே புகழ்தங்குந் துங்கராம் ஆதி(அரு)

1. தரணியோர்கட் குதவிசெய்யுஞ் சங்கையானோராம்
தரித்திரப் பிணியை போக்கும் தரும்ராஜராம்
பொருமையானோராம் புகழோங்கும் புண்ணியராம்
பொங்குமே யருளெங்குமே பிரசங்கமானோராம் ஆதி (அரு)

2. தர்கொலையை மீட்டிவிட்ட தத்வ சீலாரம்
தரியாபீவி சபதமொளிந்து சாகச்செய்தோராம்
பொற்பதியோராம் புவிபுகழும் வேந்தராம்
புந்தியாமென் சிந்தையிலுறுஞ் சொந்தமானோராம் ஆதி (அ)

3. பூரணரசன் குத்தூசின் புண்ய பாலராம்
புல்வர் ஷாகுல் ஹமீதுமைந்தன்போற்றும் பாக்கியராம்
ஆரிபரனோராம் அப்துல்காதி ரானோராம்
அங்கமெங்குந் துலங்குங் கஸ்தூரிபொங்கும் வாசராம் (அ)

(பதம் இராகம்—இந்துஸ்தான்)

பல்லவி

ஞானப்பிரகாசம் போலிலங்கிடுஞ் சோதி
நாகூரின்பீர் ஷாகுல்ஹமீதி

அநுபல்லவி

தானவனின் குத்துபுல்மஜீதி
சர்மஸ்துபீர் ஷாகுல்ஹமீதி

1. நாகூர்த்தெனும் பதிதானங்கடந்தே
நன்மலக்கூத் தறுவாஹிலுரைந்தே
தேகஜபரூத்தில் செய்கைதெரிந்தே
தெளிவானபீர் ஷாகுல்ஹமீதி (ஞானப்)

2. கல்பென்னும்ஞான கண்ணடிபார்த்தே
காணுமீரேழுலகந் தெரிந்தே
வல்லவனின் ஹலரத்திலுரைந்தே
வந்திடும்பீர் ஷாகுல்ஹமீதி (ஞானப்)

3. திருமலைசெட்டியின் தர்க்கொலைமீட்டுந்
திருவாளூர்நின்றிடுந் தேரதையோட்டுங்
குருவாயுலகில் மெஞ்ஞானமும்புகட்டும்
குதுபானபீர் ஷாகுல்ஹமீதி (ஞானப்)

4, நாகைப்பதிவிளக்கா மணிமேரா
நாதர்யூசுபின் றந்தையானபீரா
ஷாகுல்ஹமீது மைந்தனுக்குபகார
தாஜுல்ஒலி ஷாகுல்ஹமீது (ஞானப்)

(பதம் இராகம். மகமதியர் குலத்தில் மாணிக்கமா என்ற மெட்டு)

பல்லவி

1. சிந்தைநினைத்துருகி வந்தனத்தோடொந்தனின்
செந்தாமரைப் பொற்பாதமே—போற்றுமடியேன்
புந்தியின் பிடிவாதமே
திருவருள்புரியுங் குருபரனேயுன்
றருமதயாகுணமே திருநாகூர்
ஷாகுல்ஹமீ தொலிநாதா—ஆயுள்வயதை
தந்துதவிசெய்யுந் நீதா (சிந்தை)

2. வாதபித்த சிலேத்தும சீதபேதி மந்தார
மேதும்பற்பிணி யோடவே—வாகடநூற்பே
ரோதிட வகன்றோடவே
மண்டல மெண்டிசையுந் துதிமேவிய
அண்டரும் வந்துமே தொண்டுபுரிந்திடும்
மன்னர் ஹமீதொலி நாதா—வரப்பிரசாத
மாமதிய ருளுநீதா (சிந்தை)

3. தின்மையினல் விளையுங் கன்மவினைகளுடன்
குன்ம குஷ்டங்க ளோடுமே—உன்பேருரைத்தால்
நன்மைய தீகக்கூடுமே
திங்களிலங்கிய அங்கமிலங்கிடும்
தங்கத்துங்கச் சங்க மனோகர
செம்மல் ஹமீதொலி நாதா—நிதநிதமும்
தீர்ச்சைதந் தாண்டும் வேதா. (சிந்தை)

4. நிலைஇறையோன்சமுகம் தலைமைத்தனம்பெற்றெங்கும்
மலைமீதுவைத்த தீபமே—போற்றி நின்றோர்க்கு
விலைமதியாத லாபமே
நித்த நினைத்திடும் ஷாகுல்ஹமீது
புத்திர னெத்தினம் பத்திபிடித்திடும்
நீதர்ஹமீ தொலியுல்லா—என் சிந்தைதன்னில்
நீடித்திருக்கும் திக்றுல்லா, (சிந்தை)

5. உத்தமர் செய்குநஜு முத்தினெலிதமக்கு
பற்றுங் கொம்பை யெடுத்தோரே—பாத்திமாதானி
புத்திரராக வந்தோரே
உம்பர்கள் போற்றிடும் செம்பொற்பதமே
நம்பிடுஞ் ஷாகுல்ஹமீ தொலியுல்லா
உன்கருணை யருள்வீரே—தாசன்றுவாவை
உடன் கபூலாகச் செய்வீரே. (சிந்தை)

6. திங்க ளொலிபோன்முக மெங்குமிலங்குகின்ற
சங்கை யூசிபின் றந்தையே—ஈரேழுலகம்
பொங்கித் துலங்கும் விந்தையே
[illegible]யமா யென்முன் விழிக்கிடையில்
நன்மயமாய் வருஞ்செம்மல் ஹமீதொலி
திருப்பாதந் தருள்வீரே—தாசன்றுயரை
தீர்த்தனுகூலஞ் செய்வீரே. (சிந்தை)

7. நேசமுரு மசன்குத்தூசி னெலிகல்புசந்
தோசமுருங் குமாரரே—தொல்லுலகிலென்
பாசவினைகள் தீர்ப்போரே
நேத்திரத்துடன் மனந்தோத்திரமாகப்
போற்றிடுஞ் ஷாகுல்ஹமீ தொல்யுல்லா
நேரிலெனக் கருள்வீரே—தௌஹீதுவழியில்
நின்றின்றிடச் செய்யுமென்பீரே (சிந்தை)

மீரான் முஹியித்தீனாண்டகையை
தோத்திரஞ் செய்து பாடிய முனாஜாத்து

அறுசீர் விருத்தம்

அவ்வலில் மற்லு தாத்தேயரும் பொருள்ஹூவியத்தாகி
எவ்வுயி ரினுக்குள் தோன்றி இலங்கிடு நிராமயத்தின்
செவ்விய ஆலஃமின்சான் சிறந்தமெய்ப் பொருளாய்வந்த
முவ்வருள் செய்குமீரான் முஹியித்தீ னௌலியுல்லாவே 1

பாததினை பகர்ந்துரைக்கும் பயகம்பர் நபியுல்லாவின்
கோத்திரந் தனிலுதித்த குருமணி யபுசாலிஹி
னேத்திர மகவென்னுட்ட நிறப்பத்தி லாக்கிவைக்கும்
மூர்த்தியே செய்குமீரான் முஹியித்தீ னௌலியுல்லாவே 2

தகப்பனுந் தாயுந்தங்கட் டாளிரு மலரேயல்லால்
ஜெகத்தினி லுங்களைபோற் சிறந்தவ ரொருவரில்லை
அகமகிழ் கொண்டிவ்வேளை யடிமையின் வாட்டமான
முகத்தினை பார்க்குமீரான் முஹியித்தீ னௌலியுல்லாவே 3

தவாபருள் ஞானந்தன்னை தரணியிற் றுடாராமூடன்
அவாவெனு மாய்கைகொண்டே அலைந்திடாமற் காத்தென்மூன்
ஜவாபுட னேரில்வந்தே தயவருள் புரிபுங்கோவே
முவாஹி பருளுமீரான் மூஹியித்தீ னௌலியுல்லாவே 4

ஜன்னத்துல் பிருதவ்சென்னுந் தலத்தினுக் கரசரேயுன்
நன்னயப் பதமிரண்டை நம்பியேஇருக்கும் பைய்ய
லென்மனந் துயரந்தீர இதுசமயத்தில் வந்தே
முன்னருள் புரியுமீரான் முஹியித்தீ னௌலியுல்லாவே 5

ஹயாத்தெனக் கதிகமாயிவ் வகிலத்திற் றந்துநின்றன்
தியானமே கொண்டெந்நாளுஞ் சிந்தையிற் றரிந்திருக்க
தயாள மேவிடுங்கண்ணாலே தமியனைப்பார்த் திப்பூவில்
முயலருள் சேர்க்குமீரான் முஹியித்தீ னௌலியுல்லாவே 6

கபியருள் திக்கிரிணைசை கல்பினி நிலைநிருத்தி
கபியருளாகப் பார்க்க கண்திறந்திடு மவ்வேளை
கபியருள் தாத்துதன்னை காணவே காட்சியாக
முபினுட[illegible] ரேன்றுமீரான் முஹியித்தீ னௌலியுல்லாவே 7

தம்மினில் னிறப்பமான தன்வடிவான தாத்தை
செம்மையாய் கண்டிரைஞ்ச சிந்தித்தே னும்மைகொண்டே
இம்மை யுமறுமையும் பேரிலங்கிட வாழ்வைதந்தே
மும்மல நீக்குமீரான் முஹியித்தீ னெலியுல்லாவே 8

நாத்துஞ் சிபாத்தில்லாத தானமா லாமகானில்
தோத்திரத் துடனெழுமபுஞ் சோதிப் பிரகாசமாக
நேத்திர விழிக்கிடையில் நிறப்பமாகிடு மென்னுசான்
மூர்த்தியே செய்குமீரான் முஹியித்தீ னெலியுல்லாவே 9

ரப்பருள் ரிஸ்குதன்னை நலமுட னென்றனுக்கு
உப்புடன் மிகுதமாயிவ் வுலகினிற் கொடுத்துக்காக்குஞ்
செப்பிடுங் குபுதுகௌதென் சிந்தையை விளங்கும்ஞான
முப்பொருள் செய்குமீரான் முஹியித்தீ னெலியுல்லாவே 10

ஸாயிதா யுள்ளவர்க்குஞ் சைப்கொலி மார்களுக்கும்
வாயிது கவ்தாவந்த வள்ளலே யுமதுதொண்டன்
ஜாயிலாய்ப் போகிடா மற்றுங்களின் கூட்டத்தோடு
மூயிதாய் சேர்க்குமீரான் முஹியித்தீ னேலியுல்லாவே 11

சிற்றேடு முகக்கண்மூடி சிறந்தச னேபரியை
சிற்றேடு பார்க்கப்பார்க் திறக்கு மவ்வழியின்மத்தி
முத்தோடு பவளம் பச்சைமுகம்மது நபியுல்லாவின்
முத்தொளிவான மீரான் முஹியித்தீ னேலியுல்லாவே 12

சம்சுதாத்தின் சுடர்கள் தாவிய மேடைதன்னில்
அம்சுய ரூபந்தன்னை யழகுடன் காண்பதர்க்கே
இம்சைகள் நீக்கி ஹக்கோடிணங்கிட கருணைசெய்வீர்
மும்மணிசெய்கு மீரான் முஹியித்தீ னெலியுல்லாவே 13

சபுரெனும் பொருமையோடு சாந்திருக்காது நித்தம்
சுபமுடன் கேள்குஞ் சொந்ததொண்டனை இகழ்ந்துவிட்டால்
நிபுணரென்றன்னை காக்க நீணிலத் தெவருமில்லை
முபினுடனூரு மீரான் முஹியித்தீ னெலியுல்லாவே 14

லயிபென்னும் புவியின் வாழ்வை நாடியே ஆசைகொண்டு
தயவில்லா புல்லரோடு சார்ந்துசுவால் செய்யாமல்
ஜெயமிரு கைமுதல்கள் சிறப்புடன் மிகவேதந்து
முயிர்ச்சியிலாக்கு மீரான் முஹியித்தீ னெலியுல்லாவே 15

தரிகினில் சேர்ந்திட்டோனை தள்ளிடாமல் கைதாங்கி
வரிசையாய் வரங்கொடுத்துவைத்து சக்ராத்துவேளை
தெரிசனஞ்செய்ய தோன்றி செய்தா னின்கலைவகற்றி
முரிதினிற் சேர்க்குமீறான் முஹியித்தீ னொலியுல்லாவே 16

வில்லில்விவாவுக் கொடியின் னிழலினி லொதுங்குதற்கு
தொல்லுலகிடத் தொன்னுமந் தோத்திர மிகவேசெய்து
சொல்லியே புகழ்ந்து கேள்குந் துவாலினுக்கருளுமைய்யா
முல்லியார் செய்குமீறான் முஹியித்தீ னொலியுல்லாவே 17

ஆலமின்சானி னூத் ததனோடைசுசாமான
ஆல்மல கூத்தறுவா யருள் ஜபரூத்திற்பீராய்
ஆலம்லாகூத்தில் ஹக்காம் அபரூப சூரத்தோடு
மூலமெய்வடிவு மீறான் முஹியித்தீ னொலியுல்லாவே 18

கனிஎன்னும் ரிஸ்க்கின்வாசல் கசானத்தின் றிறவுகோலை
துனியாவில் கொடுத்துதவி தொண்டனை யாள்வதோடு
தனிமைவிலாயத்தென்னுந் தானமும் தந்து காப்பீர்
முனிவர்கள் துதிக்குமீறான் முஹியித்தீ னொலியுல்லாவே 19

பகுமான லாகூத்தான பதியினிற் றனித்திருந்து
சுகமுட னுஷிக்காகி சூழ்ச்சமெய் ரூபந்தன்னை
அகமகிழ் பொருந்தவே கண்டாநந்தங் கொண்டிருக்க
முகந்தருஞ் செய்குமீறான் முஹியித்தீ னொலியுல்லாவே 20

குத்தூசியாம் றாஹினுக்குள் குற்றத்துல் ஐனியாக
நிதமிரு விழிக்கிடையில் நின்றிடுந் தாத்துல்லாவே
மதியொளி போலென்னுள்ளத்தில் வாழ்ந்திடுந் [illegible]வே
முதுமணிசெய்கு மீறான் முஹியித்தீ னொலியுல்லாவே 21

காமிலாஞ் செய்கைதேடி காடெங்கு மலைந்துவாடி
சேமநின் தர்கா வந்து சேர்ந்திட கனவில்காட்டு
நாமஞ் சுல்த்தான் கலீபாநாதரின் சீடனென்னை
முமீனியாக்கு மீறான் முஹியித்தீ னொலியுல்லாவே 22

விகாவெனுஞ் சந்திப்பாக நின்றிடுங் கண்ணாடிக்குள்
தகுதிநாம வனுமாக தனித்திடு மஹதுல்லாவை
மிகுதியாய் நினைத்து மவ்த்துவேளையில் திக்ரினோடு
முகப்ப[illegible]திலாக்கு மீறான் முஹியித்தீ னொலியுல்லாவே 23

முத்தலகா மஹ்லுதாத்தில் முப்பொருள் வடிவுமாக
முத்தலகாய் வந்தமீமில் முகம்மது நபியுல்லாவாய்
முத்தலகாய் தோன்றியெங்கு முளங்கிடுந் தாத்துல்லாவே
முத்தலகாம் செய்குமீறான் முஹியித்தீ னெலியுல்லாவே 24

நஸீபுபோ லாகுமென்று நம்பியே இருந்தென்னைநந்
துஸிகரங்கொண்டுன் பாதந் துணைஎன நாடுபையல்
விசுவாசமாகவே இவ்வேளையிற் கொள்ளும் ரணத்தின்
முசிபத்தை நீக்குமீறான் முஹியித்தீ னெலியுல்லாவே 25

வரிசையுந் தவமும் வாய்ந்தவள்ளலே யுமதுபாதம்
தெரிய முஷாஹதாவே செய்து கொண்டிருக்கும்போது
பிரிசமாய் தோன்றி ஞானப்பேரருள் முகத்தைகாட்டுஞ்
முருசிதே செய்குமீறான் முஹியித்தீ னெலியுல்லாவே 26

ஹாதியாம் நஸியத்ததனை ஹாலிரா யுரவுகொண்டு
வேதவாய் மொழியினாலே விண்டிடமவ்த்து வேளை
போதமு மாரிடாமல் புகழ்ந்திட நாவினுக்குள்
மூதுரையருளு மீறான் முஹியித்தீ னெலியுல்லாவே 27

லாமவுஜூத இல்லல்லா வெனு நாட்டத்துள்ளில்
நேமநன்னிஸ்டை செய்து நிறப்பத்தி லாக்கிவைத்து
சேமமாஞ் சம்சுதாத்துள் சிறப்புடன் றானய்நிற்கும்
மூமீனே செய்குமீறான் முஹியித்தீ னெலியுல்லாவே 28

எப்படைப்புகழும் போற்றி இரஞ்சிடும் பதந்துதித்து
செப்பிரு கைகளேந்தி சிறப்புடன் கேள்குந்துஹா
ஒப்புக்கொண்டென் றுயர மொளிந்திடக் கருணைசெய்வீர்
முப்புவிப்புகழு மீறான் முஹியித்தீ னெயுல்லாவே 29

ஹக்கனை துதிக்குஞ் ஷாகுல்ஹமீதருள்புலவர் லெப்பை
தக்கநற்பாலன் மீறான் சாகிபு புலவனுக்கும்
மக்கள் தாய்தந்தை தம்பிமனைவி யோடெவற்குந்துஹா
முக்கியஞ் செய்யுமீறான் முஹியித்தீ னெலியுல்லாவே 30

அடிமை னென்செய்த பாவ மடங்கலையும்பொருத்து
படியினிலெந்தாய் தந்தை பாவங்கள் பொருத்தென்னோடு
துடர்ந்திடுமாக்கள் செய்த தொல்வினை யகற்றியாள்வீர்
முடிமன்னர் புகழுமீறான் முஹியித்தீ னெலியுல்லாவே 31

ஷாகுல் ஹமீது நாயகம் தோத்திர முனாஜாத்து.

விருத்தம்

அலிபின்வடிவே இருலாமா யருள் ஹுவ்வா எவ்வுயிரினுக்குள்
துலிபத்தடங்கா சூழ்ச்சமதாய் துலங்குமிறையோ னகமியமாங்
கலிமாபொருளே யவர்களுக்குங் காட்டுமின்சான் காமிலுமாய்
தலைமைசெலுத்து நந்நாகை ஷாகுல்ஹமீது நாயகமே 1

பகாஅவ யுடையறகுமானின் பதியோடுரைந்து மொழிபகர்ந்த
மகாமதிப் பிரகாசர்நபி மகளாப்பாத்திமா வழியில்
ஜெகமீதினிலே வந்துதித்த செய்யிதசன் குத்துசிருகண்
சகாயமணியே மும்மணியே ஷாகுல்ஹமீது நாயகமே 2

தாங்களைப்போலிவ் வுலகில் தயவுசெய்வோ ரிலையென்று
பாங்காய் நம்புமடியேனை பார்க்குங்கிருபை கண்ணாலே
தீங்கெல்லாம் பறந்தோடிடவென் சிந்தைதனில் மெய்வடிவாக
சாங்கமாய் குடிகொண்டிடுவீர் ஷாகுல்ஹமீது நாயகமே 3

தாபித்தான தவம்புரிந்து தங்குஞ்சுகூதின் வேளையிலே
தீபப்பிரகாசச்சுடரை தெரிந்தென் அகக்கண் ணுலிறைஞ்ச
ஆபியத்துங் கைரியத்தும் அடியேன்றனக்கு நன்கொடையாய்
சாபியத்தாய் தந்தருளும் ஷாகுல்ஹமீது நாயகமே 4

ஜம்கூத் தானஇஸ்மளவில் சார்ந்தே வகுதானியத்தாகி
செம்மையாய் குணங்குடிகொண்டு சிறப்புற்றோங் கிஇருப்பதற்
உம்மைக் கொண்டுபகாரங்க டுலகில்தேடும் பையல்மனஞ் [கே
சம்மதித் திடவேசெய்திடுவீர் ஷாகுல்ஹமீது நாயகமே 5

ஹகாயிக் கானகடலினுக்குள் அருளாய் மெய்முத்தெடுத்திடவே
மகாமாத் தானவழிகடந்து வல்லோனருளை பெற்றிடவே
பகாவா யுலகிலெந்நாளும் பவமாம் வினைவந்தடாமல்
சகாயத்துடனின் னருள்புரியுஞ் ஷாகுல்ஹமீது நாயகமே 6

காவிகானநாயகனை கருத்தில் நிதமுமிகப் பொருத்தி
மேலாய் வணக்கங்கள்செய்து மேன்மையடைந்து கொள்வதற்கு
காலந்தனி லெந்தனக்கதிக கனநாள் வயதைதந்துதவி
சாலத் தவம்புரியச்செய்வீர் ஷாகுல்ஹமீது நாயகமே 7

தாயிமான திக்ருதன்னை தரிப்பாடாக்கி யென்னுவிடல்
ஆயுளோ டிணக்கஞ்செய்தே ஐனின்சுடரை தெரிவதற்கே
தூயமுனா ஹாதாவழியிற் றுரியாதீதப் பொருளோடு
தாயிமா இருகச்செய்வீர் ஷாகுல்ஹமீது நாயகமே 8

தாத்துல் கிபுரியாவினுக்குள் தங்குங்கன்சுல் மகுபியா
சூஸ்த்தி ரப்பொருள் வழியை துறக்குஞ்ஞானகண்ணாடி
பார்த்தே சுயசொரூபமதை பண்பாபாய்கண்டிடச்செய்திடுமெய்
சாஸ்த்திரப் பொருள்வடிவே ஷாகுல்ஹமீது நாயகமே 9

ராஸிகான பொருளைபெல்லாம் நலமாயெற்கு கொடுப்பதற்கு
வாஸிலாக உங்களையே வாழ்த்தி துதிக்குமடிமைதுவா
ஆஸிலாகக் கிருபைசெய்வீர் ஆதியிறைவோன் றாதான
தாஸி மிறசூல்நபிபோரா ஷாகுல்ஹமீது நாயகமே 10

சமான்மகுஷர் நாளையிலே தாங்கள்ஹம்து கொடிநிழலில்
அமானமாய் வந்தடைந்திடுமிவ் வடியோன் தன்னை சேர்த்துகொள்
கமாலையுடைய மகுபூபென் கல்புக்கண் திறக்கச்செய்தே [வீர்
ஜமால்வடிவை காட்டிவைக்கும் ஷாகுல்ஹமீது நாயகமே 11

சிற்றின் ரகசியப்பொருளை தெரியுங்கண்ணாடிக் குள்ளில்
சிற்றின் ஞானரூபமதை தெளிவாய் பார்த்துகளிகொள்ள
துற்றத்துல் பைலாவாக துலங்குநபியின் திருபோரா
சற்றேன் றணுகாமற்காக்கும் ஷாகுல்ஹமீது நாயகமே 12

சம்சும் பதுறுமுடுக்குலமும் சார்ந்தமனுஜின் படைப்பெவையு
மும்பே ருரைத்தா லவைகளெல்லா முடனேபணியுநாயகமே
எ[illegible] வி[illegible]ன்ரணுகாம விரங்கிகருணை செய்திடுவீர்
சம்பூ ரணவடிவுடைய ஷாகுல்ஹமீது நாயகமே 13

சாதிகான முரீதினைப்போல் தாங்கள் கூட்டத்தினிற்சேர்த்து
நீதமுறும் பக்கீர்களுடன் நீங்கள்வந்தென் சக்ராத்தில்
போதமறு மிபுலீசிடரை போக்கிநல்மவுத் தெய்திடவும்
சாதந்தருள் புரிந்திடுவீர் ஷாகுல்ஹமீது நாயகமே 14

லற்றும்பவங்கள் சாராமல் லயிபாம் புவியையுவக்காமல்
சிற்றும் ரகசியப்பொருளாம் சீனின்கண்ணாடியைபார்த்தே
குற்றத்துல் ஐனின்வடியை கூடித்தரிசித் திடவெநிதம்
சற்றும்துயரம் தீர்த்திடுவீர் ஷாகுல்ஹமீது நாயகமே 15

தாஸிமா நபிமுகத்திற்காய் தமியேன்பிழைகளெல்லாம்பொருத்
ஆஸிலான வழிதந்து அடிமை நடந்துகொள்வதற்கே [து
நேசமா யிருபாதத்தை நிதமும்புகழ்ந்து துதித்திரைஞ்சும்
தாசன் முகம்பார்த்திரங்கிடுவீர் ஷாகுல்ஹமீது நாயகமே 16

லாவி மாயுள்ளவனுலும் நயினு ரேயுங்களுடைய
மேலாங்கல்பின் கிருபையினுல் மேன்மையடைந்து கொள்வதற்கு
சீலமா இருபாதத்தை சிந்தைகொண்ட அடியேனை
சாலிசாக்கி வைத்தருளும் ஷாகுல்ஹமீது நாயகமே 17

ஆலமின்சான் கோலமதின் ஐனின்ஒளிவை தெரிவதற்கு
தூலமுடனே சூழ்ச்சமொடு துரியாதீத மெய்ப்பொருளை
வாலசொரூபமாய் தோன்றும் வழியின்றீதா ரைநிதமும்
தாலத்தினிற் கண்டிடச்செய்வீர் ஷாகுல்ஹமீது நாயகமே 18

கனியாம்வாழ்வை யுடையவருன் கருணைக்கண்ணு லென்மீதில்
துனியாவினிலே பார்த்திரங்கி துலங்குஞ் செல்வப்பொருளோடு
கனதி விலாயத்தெனும் வரிசை காணுஞானகுருபீடம்
தனிமை யாகதந்தருளும் ஷாகுல்ஹமீது நாயகமே 19

பாத்திகாசூரத்தோதி பண்பாஇருகை யானேந்தி
தோத்திரத்துடன் சேட்ருந் துவாவை மகுபூலாக்கிவைக்கும்
நேத்திரவிழிக்கிடையில் நிற்குஞ் ஞானப்பிரகாச
தாத்தின்சுடரேமுச்சுடரே ஷாகுல்ஹமீது நாயகமே 20

குல்ஹுவல்லா சூரத்தொடு கூறும்பொருளையானறிந்து
பொல்லாபுலனும் பொறிகரணம் போக்கிஜமாலை தரிசித்து
நல்லோர்கூட்டத்தினிற் சேர்ந்து நானு நல்லவனுகவே
சல்லாபக் கருணையருளும் ஷாகுல்ஹமீது நாயகமே 21

கன்சுல்மகுபியாப் பொருளாங் கசானுவாசல் வழிதுறந்தே
என்பால் தந்தேயுதவி செய்யுமெங்கட்குடிக் கரசானோரே
முன்பாவிறையோனொளிவினுக்குள் முத்தாய்திரண்டநபிஇறசூல்
தன்பால் வழியிலுதித்தவரே ஷாகுல்ஹமீது நாயகமே 22

லாஇ லாஹாஇல்லல்லா நாடுங்கலிமா வின்றிக்ரை
காய மோடிணக்கமாக்கி கடைநாள் நபியின்ஷபாஹத்தை
தூய முடனேயானடைந்து துய்யோன்றிதா வைநிதமும்
தாயி மா...பெறச்செய்வீர் ஷாகுல்ஹமீது நாயகமே 23

முத்தினொளிபோற் றிரண்டுருவாய் முழங்குந் தாத்தினபரஞ்சு
நத்தா சைகொண்டுமெதடியேன் நம்புமிருபாதந் தனையே [டரே
பந்திபிடித்தோன் பவநீக்கி பாதுகாத்துக் கிருபைசெய்யும்
சத்தாய் பயனேநயனருளும் ஷாகுல்ஹமீது நாயகமே 24

நூனின் மகுபியாவாக நூராஇலங்குங் காலமெல்லாம்
தானோன் றன்னைதான்பார்க்க தாத்தேபொங்கி வந்திடுமெய்
ஞான மகுமூ திறகூவின் நயினார்மரபில் தோன்றும்பிர
தான மணியேநன்மணியே ஷாகுல்ஹமீது நாயகமே 25

வல்லோன் ஹலரத்தினிற்சென்று வரிசைவாழ்வு பெற்றோரே
நல்லவடிமை இவனென்று நட்பாய் தாங்கள்கைகொண்டே
உல்லா சத்துடன்றூக்கி யுயர்ந்தபீடத்தினில் வைக்கும்
சல்லா பக்குருபரனே ஷாகுல்ஹமீது நாயகமே 26

ஹாதி யாகஎந்தனக்கே அருள்மெஞ்ஞானந் தந்தகுரு
நாதர்சுல்த்தான் கலீபாவின் நயினார்மரபில் தலமுறைமூ
தாதா வின்பாட்டனராக தாலந்தனிலே வந்துதித்த
சாது சற்குணமுடைய ஷாகுல்ஹமீது நாயகமே 27

லாமக் கானாயெங்கு முரைராபகலற்ற வீதியிடை
சேம மாஇறையோ னொளிவிற் சிறப்புற்றோங்குமெய்வடிவே
ஆமீ னென்றிருகையேந்தி யடியேன்கேள்கும் துவாவைகபூல்
தாமித மில்லாமல்செய்வீர் ஷாகுல்ஹமீது நாயகமே 28

எங்கட் குடிக்கரசானோரா இருக்குந்திருமெஞ் ஞானகுரு
தங்கள் துதிபாடுமீரான் சாஹிபின்பிழையை பொருத்து
[illegible]தச்சேமை செய்யவைத்து மெஞ்ஞானங்
தங்கிவாழ வருள்புரிவீர் ஷாகுல்ஹமீது நாயகமே 29

எக்காலமு மிப்புகழெடுத்து இசைவாய் படிப்போர்கேட்போர்க்
மக்கள் தாய்தந்தைதமனைவி மரபின்சுற்றத் தார்கட்கும் [கென்
மிக்கப் பொருள்தந்தோர்கட்கும் மேலாம் தரஜாவைகொடுத்து
தக்கோன் [illegible]தாறில்சேர்க்கும் ஷாகுல்ஹமீது நாயகமே 30

முனாஜாத்து முற்றிற்று.

ஹிலால் பிரஸ், வடக்கு ரதவீதி, திருநெல்வேலி டவுண் — 3.'34.